**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 125/2018 P.W.2 / LW 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கலைமணி | **Caste** | : | |
| **Father's Name** | : | சின்னையன் | **Calling** | : | |
| **Village** | : | அசேஷம் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 62 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 14.03.2024**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் அஞ்சல் துறையில் வேலை பார்த்து தற்சமயம் பணி ஓய்வு பெற்று விட்டேன். இவ்வழக்கின் அசா.1 எனக்கு தெரியும். என்னுடைய அப்பாண்ட்மண்ட்டில் குடியிருக்கிறார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 21.08.2017 ஆம் தேதியன்று இரவு 10.00 மணியளவில் எங்கள் அப்பாண்ட்மண்டை சேர்ந்த டாஸ்மார்க் சூப்பர்வைசரான இலக்குவணனை யாரோ தாக்கி விட்டு அவர் வைத்தியிருந்த பண பையை பறித்து சென்று விட்டதாக அருகில் உள்ளவர்கள் எனக்கு போன் மூலமாக தகவல் சொ்னனார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். மறுநாள் 22.08.2017 ஆம் தேதி போலீசார் காலை 06.00 சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் எங்கள் முன்னிலையில் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்தேன். பார்வை மகசரில் எ்னன எழுதியிருந்தது என்பதை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உ்ளள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அசா-ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) மன்னார்குடி காவல் நிலையத்தில் வைத்து எ்னனை விசாரித்தார்கள். நான் அங்கு வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் - சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எல்லாம் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன் என்றால் - நான் படித்து பார்த்தேன்.

அசா.1 ஒரே அப்பாணட்மண்டில் குடியிருப்பவர் என்பதால் அவருக்கு ஆதரவாக முதல் விசாரணையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/---------

M. Sureshkarthik

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.